1982 மார்ச் 31]

[முற்பகல் 10-40]

(ஆ) செங்கழுநீர் மலைக் குவாரிகளினால் குடியிருப்புகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

*திரு. பம்மல் நல்லதம்பி: துணைத் தலைவர் அவர்களே, 'பம்மல் செங்கழுநீர் மலையில் கல் உடைக்கும் குவாரிகளினால் அருகிலுள்ள குடியிருப்புப் பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

செங்கழுநீர் மலையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் மேற்கொண்டு குவாரி வேலைகளைத் தடை செய்வதின் மூலம் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டாலும், மக்களின் பாதுகாப்பையும், பொது நலனையும் கருத்தில் கொண்டும், முக்கியமாக காமராசர் நகர், சங்கர் நகர், எல்.ஐ.சி. நகர் குடியிருப்பு பகுதிகள் நகரம் மற்றும் கிராமப்புற அமைப்பு இயக்குநரால் ஒப்புதல் அளிக்கப்பட்டு வீட்டுமனைகள் வாங்கிய நூற்றுக்கணக்கானவர்களின் நிலைமையை மனதில் கொண்டும் மாநில புவியியல் வல்லுநர் பரிந்துரையை ஏற்று முதல் அமைச்சர் அவர்களின் ஆணை 1979-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 7-ஆம் நாள் அன்று பெற்று, செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் மறு ஆய்வு செய்யும்வரை குவாரியைத் தடை செய்ய ஆணையிடப்பட்டது.

2. 1979-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 8-ஆம் தேதியிட்ட ஒரு முறையீட்டில் தலைமை நிர்வாகி, காமராஜபுரம் ஒப்பந்த தொழிலாளர் கூட்டுறவு சங்கம் மேற்படி குவாரிகளைத் தடை செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். 1979-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12-ஆம் தேதியிட்ட கடிதத்தில் சென்னை துறைமுகக் கழகம் தனது பணிகளுக்காக மேற்படி குவாரிகளைக் குத்தகைக்கு கொடுக்கும்படி இவ்வரசை கேட்டுக் கொண்டது. திரு. யேசுமரியன் மேற்படி குவாரிகளை மூட வேண்டாம் என்றும் குத்தகைக்கு விட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28-ஆம் தேதியிட்ட அரசு ஆணை நிலை 1642-இல் கீழ்க்கண்டவாறு ஆணையிடப்பட்டது:—

மலையின் கிழக்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் வீடுகள் கட்டப்படுவதைத் தடைசெய்து மாவட்ட ஆட்சியர் வெளியிட்டுள்ள 3.11.78 தேதியிட்ட தடை ஆணையை நீக்கவும், அதை ஒட்டி நகரம் மற்றும் கிராமப்புற அமைப்பு இயக்குநர் அப்பகுதியில் சங்கர் நகர் லேஅவுட்டுக்கு அளித்திருந்த அனுமதியை ரத்து செய்து வெளியிட்டுள்ள ஆணையை நீக்குவதற்கும் வேண்டிய நடவடிக்கையினை அம்மலையின் மறு நில அளவு முடிக்கப்பட்ட பின்னர் எடுத்துக் கொள்ள ஆணையிடப்பட்டது.

3. மேற்படி மலையின் தென்பகுதியிலும் மேற்கு பகுதியிலும் உள்ள 23 ஏக்கராவில் மட்டும் குவாரி செய்ய மேற்படி சங்கத்திற்கு இசைவு கொடுக்கப்பட்டது.

4. குவாரி வேலை நடக்கும் இடத்தை மையமாகக் கொண்டுவரையும் 400 மீட்டர் வட்டத்தில் அடங்கும் இடம் பூராவும் அபாயகரமான இடமாகக் கருதப்படவேண்டும் என்று சுரங்கப் பாதுகாப்புத் தலைமை இயக்குநர் தமது பரிந்துரையில் சுட்டிக்காட்டியுள்ளார். மறுநில ஆய்வு செய்த பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் மேற்படி தலைமை இயக்குநரின் கருத்தை ஏற்று 5-3-81 அன்று சர்வே நெ. 144—1ல் உள்ள கல்குவாரியை மூடிவிட பரிந்துரைத்தார். ஆனால் தொழில் வணிக இயக்குநர் 50 மீட்டருக்கு அப்பால் குவாரி வேலைகள் செய்வதால், சுரங்கப் பாதுகாப்பு விதிகளை அனுசரித்து வீடுகட்ட அனுமதிக்லாம் என்று பரிந்துரைத்தார்.

5. இதற்கிடையில் காமராசபுரம் ஒப்பந்த தொழிலாளர் கூட்டுறவு சங்கம் குவாரியை மூடிவிடுவதால் தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடும் என்று அரசுக்கு முறையீடு செய்தனர். அதன்பேரில் செங்கை மாவட்ட ஆட்சியாளர் மற்றும் மாநில புவியியல் வல்லுநரையும் பம்மல் கிராமம் புலஎண் 144—1ஐ மீண்டும் இருவரும் ஒன்றாகப் பார்வையிட்டு அரசிற்கு இணை ஆய்வறிக்கை அளிக்குமாறு கேட்டுக் கொண்டதின்பேரில், 10-11-81 அன்று அரசிற்கு இணை ஆய்வறிக்கை அனுப்பினர். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

இங்கு இருக்கும் குடியிருப்புகளுக்கு குவாரிகளினால் பாதிப்பு ஏற்படுவது குறித்தும் கருத்தில் கொண்டு விரைவில் இதற்கு தகுந்த முடிவெடுக்கப்படும்.

திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் 23 ஏக்கர்களில் மேற்குப் பகுதியிலும், தெற்குப் பகுதியிலும் கல் உடைக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், கல் உடைக்கும் நிறுவனத்தார் கிழக்குப் பகுதியிலும், மேற்குப் பகுதியிலும், வடக்குப் பகுதியிலும் கல் உடைக்கின்ற காரணத்தினால், சங்கர் நகர், எல்.ஐ.சி. நகர் போன்ற குடியிருப்புகளில் இருப்பவர்கள், அதிலும் குறிப்பாக கம்ப்பிரஷர் போன்ற மிஷின்களை வைத்து ஆழ்துளை போட்டு, கல்லுடைப்பதால், அந்தக் கற்கள் குடியிருப்பு பகுதிகளில் வெடித்து, பல்வேறு ஆபத்துக்களை உருவாக்குகிறது. ஆகவே, கிழக்குப் பகுதியிலேயும், வடக்குப் பகுதியிலேயும் அவர்கள் அரசு உத்தரவு இருந்தும்கூட, இங்கே கல்லுடைப்பதால், தொடர்ந்து

1982 மார்ச் 31] [திரு. பம்மல் நல்லதம்பி]

உடைத்துக் கொண்டு வருவதால், அந்தப் பகுதியிலே உள்ள 1,400 மனைகள் 1973-லே நகர அமைப்பு இயக்குநரால் அனுமதி அளிக்கப்பட்டு, கல் உடைக்கும் நிறுவனத்தார் வேண்டுகோளுக்கிணங்க, 1978-லே அனுமதி மறுத்திருக்கிறார்கள். அதன் காரணமாக, இந்த 1,400 குடியிருப்பு மனைகளில், கடந்த 3½ ஆண்டு காலமாக வீடு கட்ட முடியாமல், அதை விற்க முடியாத நிலைமையிலே இருப்பதால், இங்கே கிழக்குப் பகுதியிலேயும் வடக்குப் பகுதியிலேயும் கல்லுடைப்பதை நிறுத்தி, அதே சமயத்தில் ஆழ்துளை குழாய்களை வைத்து கற்கள் உடைக்காமல் இதைத் தடுத்து நிறுத்தி, அவர்களுக்கு அனுமதி வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டிய இந்தப் பிரச்னைகளை, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு, அது 1979 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 7 ஆம் நாளிலே தடை ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதற்குப் பின்னால், 23 ஏக்கர்களில் மட்டும் குடியிருப்புப் பகுதிகளுக்கு பாதிப்பு இல்லாதபடி சுரங்கம் வெட்ட அனுமதிக்கப்பட்டது. அதற்குக் காரணம், அது தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்படுகின்ற அமைப்பு. இரண்டாவது, சென்னை துறைமுக நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் அந்த கற்களைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். அவர்களிடமிருந்து வேண்டுகோள் வந்தது. எனவே இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு முடிவு மேற்கொள்ளப்பட்டது. இப்போது அனுமதிக்கப்படாத இடங்களிலே, அங்கே கற்களை வெட்டுகிறார்கள் என்று சொன்னால், அதை அதிகாரிகள் சென்று நிச்சயமாகப் பார்த்து நடவடிக்கை எடுப்பார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர், அதுபோலவே மாநில புவி இயல் வல்லுநரும், அந்தப் பகுதியிலே வாழ்கின்ற குடிசைப் பகுதிகளிலே வாழ்கின்ற மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற இன்னல்களைக் குறித்து என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அரசுக்கு எழுதி அனுப்பியிருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதி மக்கள் நலனைக் கருதில் கொண்டு, அதற்கு ஏற்ப அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.